தமிழ் முரசு

திங்கள் 18 2 2013 | சிங்கப்பூர் | •2

மாணவர்களுக்கு இலவச தேர்வுப் பயிலரங்கு

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர்க் கிளை), நேற்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை, மாணவருக்கான இலவச தேர்வுப் பயிலரங்கை, சோஃபியா ரோடு, பீஸ் செண்டரில் உள்ள எட்யுகுவெஸ்ட் அனைத்துலகக் கழகத்தில் நடத்தியது.

இருபது ஆண்டுகள் அனுபவம் பெற்ற கணினிப் பொறியாளரும், மன ஆற்றல் கொண்டு தூண்டப் படும் அறிதுயில் (HYPNOSIS) துறையில் பட்டயச் சான்றிதழ் பெற்ற வருமாகிய திருமதி விமலா இந்தப் பயிலரங்கை நடத்தினார்.

தேர்வுகளை நம்பிக்கையுடன் அணுகும் முறை, பயமின்றி செயல் படுதல், நேரத்தை நிர்வகித்தல், மன அழுத்தத்தைக் கையாளும் வழிமுறைகள் ஆகியவற்றைத் தெளிவாக விளக்கும் வண்ணம் இப்பயிலரங்கு நடத்தப்பட்டது.

சுமார் ஐம்பது இந்திய மாணவர் களும் பெற்றோர்களும் இப்பயிலரங் கில் கலந்துகொண்டனர்.

கல்வி சார்ந்த சமுதாயப் பணி களைப் பிரதான நோக்கமாகக் கொண்ட ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம், சிங்கப்பூர் இந்திய மாணவர் களின் மேம்பாட்டிற்காக நடத்திய இப்பயிலரங்கு, பள்ளி மாணவர் களுக்குப் பயனளிக்கும் வண்ணம் அமைந்திருந்தது என்று ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் தலைவர் திரு முஹிய்யத்தீன் அப்துல் காதர் தெரிவித்தார்.

பயிற்றுவிப்பாளர் திருமதி விமலா நடத்திய பயிலரங்கில் கலந்துகொண்ட மாணவர்கள்.
படம்: ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம்